மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது வறட்சி நிவாரணத்திட்டத்தின் அடிப்படையில் செய்வது அல்ல. இந்தத்திட்டம் It is a regular Scheme ஆகவே சமுதாயக் கிணறுகள் தோண்டுவது என்பது அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களுடைய கடமை, ஆகவே அந்தக் கடமையின் அடிப்படையில்தான் இவை செய்யப் பட்டு வருகின்றன. இதை பொதுப்பணித்துறைக்கு விடவேண்டிய அவசியமில்லை.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, இந்த சமுதாயக் கிணறுகள் திட்டம் என் பகுதியில் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பலன்களைக் கண்ட மக்கள் ஒவ்வொரு ஊருக்கும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏறக் குறைய என் திருபுவனம் மானாமதுரை வட்டாரத்தில் ஐம்பது கிணறுகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வறட்சிக் காலங்களில் அவை உதவிகரமாக இருப்பதால் 1984-85 ஆம் ஆண்டில் நிதி உதவி செய்து இப்படிப்பட்ட சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி இருக்கிறதோ அந்தப் பொது நிதியை வைத்து சமுதாயக் கிணறுகள் தோண்ட லாம். பொது நிதி இல்லை என்றால் அரசாங்கத்தின் மூலம் மானியம் அல்லது கடன் பெற்று சமுதாயக் கிணறுகள் தோண்ட லாம். வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற நிலை இருந்தால் கண்டிப்பாக அரசு உதவி செய்யும். ஆகவே அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நெல்லை நகர் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம்.

251—*வினா எண் 19217—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நெல்லை நகர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை யில் புறவழிச் சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டும் இன்னும் பணி முடிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தேசிய நெடுஞ் சாலைப் பிரிவில் முதல் நேர்ப்பாடு (Original alignment) வழியாக திருநெல்வேலி புறவழிச்சாலை அமைப்பதற்குத் தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்யும் மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி வேலை ரூ. 12.40 இலட்சம்

1984 மார்ச் 14]

செலவில் முடிக்கப்பட்டது. இந்த நேர்ப்பாடு நஞ்சை மற்றும் நகராட்சி பரப்பில் செல்வதால் புறச்சாலைக்கு ஏற்ற நேர்ப்பாடு இல்லையென்ற காரணத்தால் மாற்று நேர்ப்பாடு (Alternative alignment) அமைக்கப்பட்டது. மாற்று நேர்ப்பாட்டிற்குத் தேவையான நிலத்தை மாநில அரசு ஆர்ஜிதம் செய்து மத்திய அரசிடம் திருநெல்வேலி புறச்சாலை அமைக்க ஒப்படைக்கவும், முந்திய நேர்ப்பாட்டில் ஆர்ஜிதம் செய்த நிலத்தை மாநில அரசு எடுத்துக் கொள்ளவும் மத்திய அரசுக்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இப்பணிக்காக ரூ. 346 இலட்சம் தேவையாக இருக்கிறது. அந்த வேலைகளை இரண்டு கட்டத்தில் எடுத்துச் செய்ய வேண்டியுள்ளது. பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய புறவழிச்சாலை நன்செய் நிலத்தில் வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்து கூறப்பட்டது. நெல்லையைப் பொறுத்த வரையில் எந்த புறவழிச்சாலைக்கு ஏற்பாடு செய்யும் போதும் நன்செய் தவிர வேறு வழியே கிடையாது. வேறு இடம் கிடையாது. இதை அரசு அறியுமா? மாற்று நேர்ப்பாடு என்று சொல்லக்கூடிய அந்த வழித்தடம் எங்கே என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, திருநெல்வேலியைப் பொறுத்த வரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் எந்த வழியில் நாம் போனாலும் நன்செய்யை கடந்துதான் போக வேண்டியிருக்கிறது. வேறு நிலம் கிடைக்காததால் நன்செய் நிலத்தை எடுத்தாக வேண்டும் என்ற சூழ்நிலையில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதைச் சீக்கிரம் இரண்டு கட்டங்களில் செய்ய ரூ. 346 இலட்சம் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது, மத்திய அரசின் திட்டம். இதில் மாநில அரசின் பங்கு இல்லை. தேசிய நெடுஞ்சாலை என்று சொன்னாலே முழுவதும் மத்திய அரசே நமக்குக் கொடுக்கிறது. ஆகவே, இரண்டு கட்டங்களாக முதலில் ரூ. 200 இலட்சம், அடுத்தாற்போல் 146 இலட்சம் ரூபாய் என்ற முறையில் ரூ. 346 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் அமுல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டம்.

252—(*வினா எண் 21275)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம் எத்தனை நகர சபைகளில் அமுல்படுத்தப்படும்?